திரு. வை. சங்கரன் : 1961 முதல் 1964 வரையில் எவ்வளவு மாணவர்கள் ரிட்டன் டெஸ்ட் எழுதினூர்கள்? அவர்களில் எவ்வளவு பேர்கள் பாஸ் செய்தார்கள்?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அந்தத் தகவல் என்னிடம் இல்லே.

திரு. ஆ. தங்கவேலு : கர்நாடக இசைக் கல்லூரியில் எந்தெந்த இனத்தைச் சார்ந்த மாணவர்கள் எடுக்கப்படுகிறுர்கள் ? மருத்துவ குல மாணவர்களுக்கு தனிச்சலுகை அளிக்கப்படுகிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதில் இனம் பார்ப்பதில்லே. இந்தத் தொழில் நடத்துவதற்கு தயாராகயிருக்கிறவர்கள் யாராக இருந்தாலும் சேர்க்கப்படலாம்.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : இந்த கர்நாடக சங்கீதத்தில் நாதஸ்வரம், தவில் இவைதான் போடப்பட்டிருக்கிறது. 'னொய், னொய்' என்று சப்தம் கேட்கிற ஒத்தும், 'சை, சை' என்று சப்தம் ஏற்படுத்தும் வேருென்று பற்றியும் இதில், குறிப்பிடக் காணேம். அதற்குத் தனியாக வேறு ஏதாவது பயிற்சி இருக்கிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதற்கெல்லாம் அதிக பயிற்சி வேண்டியதில்லே. சுலபமாக வீட்டில் கற்றுக்கொள்ளலாம்.

திரு. இராம. அரங்கண்ணல் : இந்தக் கலேத்துறையில் மிகவும் பெயர்போன மாவட்டம் தஞ்சை மாவட்டமாகும். அங்கு திருவையாறில் அமைக்கப்பட இருக்கிற கல்லூரியில் இந்தத் தொழில்களே கற்றுக் கொடுப்பதற்குப் பதில் தஞ்சையில் உள்ள குடந்தை அல்லது திருவாரூர் போன்ற இடங்களில் தனியாகவே இதற்கு ஒரு பள்ளிக்கூடம் நடத்தலாமே ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : தனியாக நடத்துவது பழனியில் நடத்தப்படுகிறது. சமீபத்தில் ஒரு சங்கீதக் கல்லூரி திருவையாறில் அமைக்கப்பட்டு அதில் இது ஒரு பாகமாக இப்போது சேர்க்கப்பட்டிருக்கிறது.

திரு. எஸ். நஞ்சுண்ட ராவ் : இந்தக் கல்லூரியில் படிக்கிறவர்களுக்கு எல்லாம் ஸ்காலர்ஷிப் வழங்கப்படுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : வழங்கப்படுகிறது.

சேலம் உருக்காலேத் திட்டம்

* 431 கேள்வி—**திரு. ம. கமலநாதன் :**
திரு. மீ. கலியாணசுந்தரம் :
திரு. கோ. சி. மணி :
திரு. கரு. சீமைச்சாமி :

கனம் கைத்தொழில் அமைச்சர் நவம்பர் 3-ம் தேதி 1965-ல் கேள்வி எண் 245-க்கு அளித்த பதிலேயொட்டி தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

சேலத்தில் உருக்காலே அமைக்கும் திட்டம் தற்போது எந்த நிலேயிலுள்ளது ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : ஜப்பானிய ஆலோசனே நிறுவனத்தின் சர்வே குழு நெய்வேலி-சேலம் உருக்கு ஆலேத் திட்டம் பொருளாதாரக் கவர்ச்சியுள்ளதாகவும், தொழில் நுட்பத்

5th November 1966]

துறையில் பயன்தரத்தக்கதாகவும் உள்ளது என்று தனது அறிக்கையில் வலியுறுத்தியுள்ளது. அந்த அறிக்கையை 1966 மார்ச் மாதம் இந்திய அரசு பெற்றுள்ளது. நெய்வேலி-சேலம் உருக்கு ஆலை நிறுவுவது குறித்து இந்திய அரசின் முடிவு எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. மீ. கலியாணசுந்தரம்: இந்தப் பதில் கனம் தொழில் அமைச்சர் பல தினங்களுக்கு முன் தயாரித்ததோ என்னவோ. இப்போது இருக்கக் கூடிய நிலை என்ன? பார்லிமெண்டில் கொடுக்கப்பட்டிருக்கக் கூடிய அறிக்கையைப் பார்க்கும்போது ஆந்திரா தன் ராஜ்யத்திற்கு வேண்டுமென்று கேட்டதன் பலனாக யாருக்குமே இல்லை என்ற நிலைமையை ஏற்படுத்தி இருக்கிறார்கள் எல்லாத் திட்டமுமே கைவிடப்படும், நான்காவது திட்டத்தில் சேர்க்கப்படாதோ என்ற நிலை இன்று ஏற்பட்டிருக்கிறது.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இல்லை என்று சொன்னதாக எடுத்துக் கொள்வது தவறு. ஒன்றை வேண்டும்போது இல்லை என்று சொல்வது நல்லதல்ல. இல்லை என்று சொன்னாலும் ஒப்புக் கொள்ளக்கூடாது. இல்லை என்று சொல்லவில்லை நான் பத்திரிகையைப் பார்த்த மட்டில். பத்திரிகையில் வந்த செய்தியை வைத்துக் கொண்டு ஒரு முடிவு கட்டுவது, அதையொட்டி பார்க்கிறது என்றால் அது நமக்கு நல்லதாக இருக்காது. நான் சொல்கிறேன், இல்லை என்று சொல்வது இல்லை. வருகிறது, ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது. பணத்தைப் பார்த்து செய்கிறோம் என்று சொல்கிறார்கள். பலர் கேட்கிறார்கள். வருவாயைப் பார்த்து செய்கிறேன் என்று சொல்வதில் தவறு இல்லை. அது ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. இல்லை என்பது இல்லை.

திரு. மீ. கலியாணசுந்தரம்: முதல் அமைச்சர் அவர்கள் வைத்திருக்கும் நம்பிக்கையைப் பாராட்டுகிறேன். வாழ்க்கையில் எப்போதும் நம்பிக்கை அவசியம். பதினைந்து ஆண்டுகளாக இதே நம்பிக்கையில் இருந்து கொண்டு இந்த சபையில் அவர்களே சொல்லியிருக்கிறார்கள். மத்திய அரசாங்கத்தில் மந்திரி சபையின் ஒரு உப கமிட்டி சிபார்சு செய்ததாக வெளியிட்ட தகவல் மறுக்கப்படவில்லை. சேலம், ஹாஸ்பட்டில் தேன் இரும்பு உருக்காலை நிறுவலாம் என்று சிபார்சு செய்யப்பட்டிருக்கிறது. அதுவும் பொதுவாக நிலைமை அனுமதிக்குமானால் என்று கூறப்பட்டிருக்கிறது. அது இதுவரை மறுக்கப்படவில்லை. ஆகவே, இச்சபையில் என்ன விவரங்கள் என்று கேட்க உரிமை உண்டு. அதைத் தெளிவுபடுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: நான் நேராகத் தெரிந்து கொண்டது இது ஏற்றுக்கொள்ளப்படும் என்பது. அதைப் பரிசீலனை செய்வதற்கு காபினட் சப் கமிட்டி போட்டதாகவும் அவர்கள் இந்த மூன்று இடங்களில் சிறிதாக உருக்காலை அமைப்பது என்று சிபாரிசு செய்திருப்பதாகவும் செய்தி வந்தது. பிறகு பெரிய உருக்காலை வைசாக்கில் ஏற்படுத்துவது பற்றி வந்தது. அதையும் பரிசீலனை செய்தார்கள். எப்போது நிதி நிலைமை அனுமதிக்கிறதோ அப்போது எடுத்துக் கொள்ளும் என்று சொல்லியிருக்கிறார்கள். அவ்வளவுதான். இதுவரை எதிர்பார்த்ததில், நம்பிக்கை கொண்டதில் ஒன்றும் பாதகம் இல்லை.

[5th November 1966

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் அவைத் தலைவர் அவர்களே சேலம் இரும்பு உருக்குத் தொழிற்சாலை நாம் கேட்ட அளவிற்கு அல்லது நாம் விரும்புகிற அளவிற்கு, அல்லது வற்புறுத்தப்பட்ட அளவிற்கு அமையாது என்ற நிலைமையில் மூன்று இடங்களில் சிறிய அளவில் இரும்பு உருக்குத் தொழிற்சாலை அமைக்கப்படும், அதற்காக ஆலோசனை நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என்ற முறையில் செய்தித் தாள்களில் வருகிற செய்திகள் கூறுகின்றன. அதிலும்கூட நிதி வசதி ஏற்படும்போது ஒன்றன்பின் ஒன்றாக எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கூறப்பட்டிருக்கிறது. நான்காவது திட்டத்தில் அவை எடுத்துக் கொள்ளப்படுகிற சூழ்நிலை இருக்கிறதா? உடனடியாக அமைகிற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறதா ? அந்த உறுதி ஏதாவது கிடைத்திருக்கிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நான்காவது திட்டத்தில் சேலம் உருக்காலையைப் பொறுத்தமட்டில் சிறிய திட்டம்தான் நாம் கோரியது. சிறிய திட்டமாக ஆரம்பித்து பின்னால் பெரியதாக்கலாம் என்பது. அது நான்காவது திட்டத்தில் எடுத்துக் கொள்ளப்படும் என்பதுதான் என் நம்பிக்கை.

திரு. சா. கணேசன் : பத்திரிகைகளில் வருகிற செய்தியை அடிப்படையாக நம்பக் கூடாது என்பதை ஓரளவுக்கு ஒப்புக் கொள்கிறேன். ஆனால் வந்து கொண்டிருக்கிற செய்தி முதலில் சர்க்கார் மூலமாகவும் பின்னர் வேறு வழிகளிலும் வந்த செய்தி உருக்காலைகள் மூன்று மாநிலங்களிலும் சிறிய அளவில் வைக்கப் படும், பொருளாதார ரீதியை அடிப்படையாகக் கொண்டு என்று வந்தது. அதற்குப் பிறகு, ஆந்திர தேசத்தில் நடைபெற்ற சில வன்முறைச் செயல்களால் வைசாக்கில் ஸ்டீல் ப்ளான்டும் 'பிக் ஐயர்ன்' என்று சொல்லும் மட்டாகமான இரும்புத் தொழிற்சாலைகள் மற்ற இரண்டு இடங்களிலும் வைக்கப்படும் என்றும் சொல்லப் பட்டிருக்கிறது. அதன் பிறகு இப்போது வேறு மாதிரியான செய்திகள் வருகின்றன. ஒன்றுக்கொன்று முரண்பாடாக இருக்கின்றன. ஆனால் ஒன்று அரசு செய்யவேண்டுமென்று நான் விரும்புகிறேன் அல்லது கேட்டுக்கொள்கிறேன். மத்திய அரசு வன்முறைச் செயல்களுக்குப் பணியக் கூடிய நிலைமை இருக்குமானாலும் அதற்காக, நாம் வன்முறைச் செயல்களைக் கையாள வேண்டும் என்று வற்புறுத்த இல்லை, அதை நான் விரும்பவில்லை, வேண்டவில்லை. அதே நேரத்தில் நம் உரிமையை, நம் தேவையை வற்புறுத்த நியாயமான, சட்டபூர்வமான, கடுமையான நடவடிக்கைகள் முழுவதையும் எடுத்துக்கொள்ள அரசாங்கம் துணை புரிய எந்த அளவு செயல்பட வேண்டுமோ அந்த அளவு மக்கள் தங்களது உணர்ச்சியை, விருப்பத்தை காட்டுவதற்குரிய வழிகளை எல்லாம் அனுமதிக்க வேண்டும். அதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதில் புதிதாக மக்கள் விருப்பத்தைத் தெரிந்துகொள்ள வேண்டிய அவசியமில்லை. அல்லது மக்களுடைய வற்புறுத்தலைத் தெரிந்து கொள்ள வேண்டிய அவசியமில்லை. இந்த அரசாங்கம் இந்த உருக்காலை இந்த அரசாங்கம் கோருகிறபடி வரத்தான் வேண்டும் என்பதை உணர்ந்து இருக்கிறது. கொஞ்சம் நாளாயிற்று என்று சொன்னால்,

5th November 1966]

பல பரிசீலனைகள் எல்லாம் நடைபெற்றிருக்கின்றன. நம் மாநிலத்தில் நாம் எடுத்துக்கொண்ட திட்டங்கள்கூட எவ்வளவு வருவாய் இருக்கும், எப்போது எடுத்துக்கொள்வது இந்த ஆண்டு எடுத்துக்கொள்வதா அல்லது அடுத்த ஆண்டு எடுத்துக் கொள்வதா என்றெல்லாம் பிரச்னைகள் வருகின்றன. அதுமாதிரி, இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில் முடிவாக, இறுதியாக உருவாக்கப்படவில்லை நான்காவது திட்டம். இந்த மாநிலத்தைப் பொறுத்தவரை, 15, 16, 17 தேதிகளில் அங்கு திட்டக்குழுவுடன் திட்டம் எவ்வாறு உருவாக்கப்படும் என்பதை விவாதிக்க இருக்கிறது. நானும் 17-ம் தேதி இந்த விவாதத்தில் கலந்து கொள்வேன். சேலம் உருக்காலையைப் பொறுத்தமட்டில் தொடர்ந்து இந்த அரசாங்கம் கவனம் செலுத்தும். இந்தத் திட்டம் ஒப்புக்கொள்ளப் படும் என்ற நம்பிக்கை இருக்கிறதென்று சொன்னேன். அதோடு கூட தொடர்ந்து இந்த அரசாங்கம் என்னென்ன வகையில் கவனம் செலுத்தவேண்டுமோ, வற்புறுத்த வேண்டுமோ, நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள வேண்டுமோ அவற்றை எடுத்துக் கொள்ளும் என்று சொல்கிறேன்.

திரு. ம. கமலநாதன் : தலைவர் அவர்களே, மத்திய சர்க்கார் செய்யவில்லை என்றாலும் மாநில சர்க்கார் இதை எடுத்துச் செய்யும் என்று நமது தொழில் அமைச்சர் அவர்கள் முன்பு ஒரு முறை பதில் சொன்னார்கள். அப்படியானால் இதுவரை இதைப்பற்றி தொழில் அமைச்சர் ஒன்றும் சொல்லாததற்கு என்ன காரணம் ? 9-00 a.m.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இன்டஸ்ட்ரியல் டெவலப்மென்ட் ரெகுலேஷன் ஆக்டின்படி சென்னை சர்க்கார் எம்.ஐ.டி.ஸி. மூலமாக தனியாக நடத்துவதற்கு அப்ளிகேஷன் ஃபைல் செய்திருக்கிறோம்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : சார், ஜப்பானிய நிபுணர்களுடைய அறிக்கை நமக்கு சாதகமாக இருக்கிறது என்றும், பொருளாதாரத் துறையில் கவர்ச்சிகரமாக இருக்கிறது என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள் என்று தொழில் அமைச்சர் அவர்கள் கூறினார்கள். ஆகவே, அந்த ரிப்போர்ட்டின்மீது மத்திய சர்க்கார் இதை உடனடியாக ஆரம்பிப்பதற்காக உத்தரவிட வேண்டும் என்று ராஜ்ய சர்க்கார் மத்திய சர்க்காருக்கு தெரிவித்திருக்கிறதா ? அப்படியென்றால் என்ன பதில் தந்திருக்கிறார்கள் ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இதை அங்கீகரிக்க வேண்டும் என்று ராஜ்ய சர்க்கார் வற்புறுத்தியிருக்கிறது. அதை மத்திய சர்க்கார் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறார்கள். முக்கியமாக நிதி உதவி செய்வதைப் பற்றி ஆராய்ந்து கொண்டிருக்கிறார்களே தவிர தொழில் நுட்பத்தைப் பற்றியோ, பொருளாதாரத் துறையில் கட்டுபடியாகுமா ஆகாதா என்பதைப் பற்றியோ பரிசீலனை செய்யவில்லை.

[5th November 1966

திரு. செ. மாதவன் : உருக்காலை ஏற்படுத்துவதற்கு, ஒன்று மத்திய சர்க்கார் அனுமதி வழங்க வேண்டும், இன்னொன்று பண உதவி செய்ய வேண்டும். பண உதவியைப் பொறுத்தவரையில் நாங்களே செய்து கொள்கின்றோம் என்று சொல்லுவதால், அனுமதி வழங்குவதைப்பற்றி ஏதாவது உத்தரவாதம் கொடுக்கப்படுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அனுமதியில்லை என்று யாரும் சொல்லவில்லை, பண உதவி செய்வதைப்பற்றித்தான் ஆராய்ந்து முடிவு எடுக்க வேண்டும்.

திரு. சா. கணேசன் : சர்க்கார் பொருளாதார நிலை காரணமாகவும், அதிகமாக முதலீடு தேவைப்படும் என்ற காரணத்தினாலும் உடனடியாக துவங்குவதற்கு சாத்தியமில்லை என்று கருதுகின்றார்கள் என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அப்படியானால், ஒருவரோ அல்லது பலரோ சேர்ந்து தனியார் துறையில் இதைத் தொடங்குவதற்கும் அதன் மூலமாக நம் மாநிலத்தின் தொழில் வளம் பெருகுவதற்கும் வேண்டிய வசதியை மாநில சர்க்கார் கொடுக்க முன் வருமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : மாநில சர்க்கார் தாங்களே இதைச் செய்வதற்கு அப்ளிகேஷன் போட்டிருக்கிறது. தனியார் துறையில் விடுவதற்கு உத்தேசம் கிடையாது.

புலவர் கா. கோவிந்தன் : தலைவர் அவர்களே, தஸ்தூர் கம்பெனி அறிக்கை வரட்டும் என்று சொன்னார்கள், அதுவும் வந்தது, ஜப்பானிய கம்பெனியின் அறிக்கை வரட்டும் என்று சொன்னார்கள் அதுவும் வந்தது, இப்படி காலம் கடந்து கொண்டே போகிறது, இன்னும் வேறு ஒரு நாட்டுக்கு அனுப்பி அதனுடைய அறிக்கையும் வரட்டும், வரட்டும் என்கின்ற நிலை ஏற்படுமா ? இந்த விதமான நிலைமை ஏற்படாமல் இருப்பதற்கு உடனடியாக ஏதாவது வழிவகை செய்யப்படுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : தஸ்தூர் கம்பெனி அறிக்கை வந்தது. அதன் பிறகு அதைப்பற்றி ஜப்பானிய கம்பெனி பரிசீலனை செய்து உதவி செய்வதாகச் சொன்னார்கள். மத்திய சர்க்காருடைய நிதி வசதி வேண்டும். அதற்காக பல நாடுகளிலிருந்து உதவியை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அது வருவது வரையிலும் காத்திருக்கவேண்டும்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : ஸார், நிதி வசதி செய்வது ஒன்று தான் இப்போது ஆலோசனையில் இருப்பதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். ஜப்பானிய நாடு நமக்கு நிதி உதவி செய்வதாக சொன்னார்கள். அப்படி ஏதேனும் வாக்களித்திருப்பது உண்மையா? அப்படியானால், காலதாமதத்திற்கு என்ன காரணம் ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அவ்விதம் வாக்கு அளிக்கவில்லை. அவர்கள் சொன்னது 'ஃபாரின் எக்ஸேஞ்ச் காம்போனெண்ட்' கொடுத்து உதவுவதாக சொன்னார்கள், அதற்கான நம்பிக்கையும் இருக்கிறது, அவ்விதம் 'ஃபாரின் எக்சேஞ்ச்

காம்போனெண்ட்' கொடுத்தாலும் கூட, இதற்கு வேண்டியது டிவால்யுவேஷனுக்கு முன்பாக 80 கோடி என்று இருந்தது. இப்போது சுமார் 20 கோடியும் சேர்ந்து 100 கோடியாக உயர்ந் திருக்கிறது. இதற்கான நிதி வசதியிருக்கிறதா என்பதைத்தான் பார்க்கவேண்டும்.

திரு. செ. மாதவன் : இந்த உருக்காலையை அமைப்பதற்கு வேண்டிய உதவி கிடைப்பதற்கு மத்திய சர்க்கார் மற்ற நாடு களுடைய உதவியை எதிர்பார்க்கிறது என்று சொன்னார்கள், நமது தொழில் அமைச்சர் அவர்கள் மற்ற நாடுகளுடைய உதவியைக் கோரினார்கள் என்று சொல்லப்பட்டது, அது உண்மைதானா? அவ்விதம் உதவி கோரியதைப்பற்றி கூட தொழில் அமைச்சரை தாக்கி ஒரு பத்திரிகை எழுதியிருந்தது அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : நான் வெளிநாடுகளுக்குச் சென்று நம்முடைய கோரிக்கைகளை ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொண்டது உண்மைதான். அதைப்பற்றி பரி சீலனை செய்து உதவி செய்வதாக சொல்லியிருக்கிறார்கள். சாதாரணமாக வெளிநாடுகளில் எந்தவிதமான—நிச்சயமான வார்த்தை எதுவும், அதாவது பிராமிஸ், கொடுப்பதில்லை. உதவி செய்யலாம் என்கின்ற கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள்.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : கனம் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, சிறிய அளவில் இதை அமைக்கலாம் என்று சொன்னார்கள். அப்படியானால் இந்தச் சிறிய அளவின் உத்தேச மதிப்பு என்ன என்பதை தெரிவிப்பார்களா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : தற்காலத்தில் 40 லட்சம் டன் உற்பத்தியாகக்கூடிய பிளான்ட்கள் எல்லாம் வந்து கொண்டி ருக்கின்றன. அதில் 5 லட்சம் டன் செய்வது, $2\frac{1}{2}$ லட்சம் கலப்பு உருக்கு செய்வதை சிறிய ஆலை என்று சொல்வதுண்டு.

திரு. மீ. கலியாணசுந்தரம் : ஸார், நமது சேலம் உருக்காலைத் திட்டத்திற்கும் ஐந்தாவது திட்டத்திற்கும் சம்பந்தம் இல்லை. சேலம் உருக்காலையைப் பொறுத்தவரையில், ஐந்து லட்சம் டன் உயர்தர உருக்கு உற்பத்தி செய்வது என்பது தனியான திட்டம். ஆகவே, இந்தத் திட்டம் ஐந்தாவது திட்டத்தில் சேர்க்காமல் தனியாக ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்படுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இதைத்தான் நாமும் பரிசீலனை செய்து கொண்டு வருகிறோம். மத்திய சர்க்காரிடத் திலும் இதைப் பற்றி சொல்லியிருக்கிறோம்.

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் தலைவர் அவர்களே, சேலம் உருக்காலை அமைப்பதற்கு வெளிநாட்டிலிருந்து உதவி கிடைக்கும் என்று எதிர்பார்ப்பதாக சொன்னார்கள். ஜப்பானிய நாட்டைப் பொறுத்தவரையில் உதவி தருவதாக ஏற்கனவே கூறியிருப்ப

தாகவும் சொல்லப்படுகிறது, நமது தொழில் அமைச்சர் அவர்களும் ஜப்பானிய நாட்டுக்குச் சென்று நிலைமையை கண்டறிந்து வந்ததாகவும் தெரிகின்றது. ஜப்பானிய நாட்டில் இருக்கிற நிலைமையையும் அவர்கள் கொடுத்திருக்கிற அறிவிப்பின்படி உடனடியாக உதவி கிடைக்கும் என்ற வாய்ப்பின் அறிகுறிகள் இருக்கின்றனவா ? இன்னும் வெளிநாடுகளுடைய உதவியை எதிர் பார்க்கின்றார்கள் என்றால் எந்த நாட்டை எதிர்பார்க்கின்றார்கள் ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இப்போது இருக்கின்ற நிலையில் ஜப்பானிய உதவி கிடைக்கும் என்ற நம்பிக்கை இருக்கிறது.

திரு. வி. எஸ். எஸ். மணி : ஐந்து லட்சம் டன் உற்பத்தி செய்கின்ற திட்டம் எக்னமிக் யூனிட்டாக இராது என்று சொல்லுகிறார்களே, அதைப்பற்றி அமைச்சர் அவர்களின் கருத்து என்ன ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கடிகாரங்கள் எல்லாம் ஒன்றாக இருப்பதில்லை. அதே போல் கருத்துக்களும் ஒன்றாக இருப்பதில்லை. நம்மைப் பொறுத்தவரையில் இந்தத் திட்டம் பொருளாதாரத் துறையில் கட்டுப்படியாகும் என்பதுதான், ஜப்பானிய நிபுணர்களும் இதை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள்.

திரு. ப. உ. சண்முகம் : இந்தத் திட்டம் நான்காவது திட்ட காலத்தில் நிச்சயமாக எடுத்துக்கொள்ளப்படும் என்கின்ற உத்தரவாதத்தை அமைச்சர் அவர்கள் அளிப்பார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : எங்களைப் பொறுத்தவரையில் நிச்சயமாக அளிக்கிறோம்.

திரு. செ. மாதவன் : வெளிநாட்டு செலாவணி கிடைக்காது என்று இருப்பதால் பொருளாதார வசதியைப்பற்றி மத்திய சர்க்கார் ஆராய்ந்து கொண்டிருப்பதாக சொல்லப்படுகிறது. அப்படியிருக்கும்போது, வெளிநாட்டிலிருந்து உதவி கிடைக்கும் உத்தரவாதம் இருந்தால், அதை மத்திய சர்க்கார் மறுப்பதற்கோ அல்லது ஆட்சேபிப்பதற்கோ மத்திய சர்க்காருக்கு என்ன உரிமை இருக்கிறது ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : சேலம் உருக்காலையைப் பொறுத்தளவில் சற்றேறக்குறைய 80 கோடி ரூபாய் வேண்டும். இப்போதுள்ள மதிப்பீட்டின்படி 100 கோடி ரூபாய் அளவுக்கு ஆகும். இதில் 30 கோடி அல்லது 40 கோடிதான் அந்நிய நாட்டிலிருந்து உதவி கிடைக்கும், மீதி 70 அல்லது 60 கோடி ரூபாய்க்கு உள்நாட்டிலுள்ள செலாவணியைத்தான் எடுத்துக்கொள்ள வேண்டும். ஆகவே, வெளிநாட்டு உதவியை மட்டும் வைத்துக் கொண்டு இதைப்பற்றி முடிவு செய்து விட முடியாது.

புலவர் கா. கோவிந்தன் : கல்பாக்கம் அணு மின்சார நிலையம் ஏற்படுத்துவதற்கும் உதவி செய்வதைப்பற்றி 1967-க்கு பின்னால் பார்த்துக் கொள்ளலாம் என்று தேர்தலில் எப்படியிருக்கிறது என்பதைப் பார்த்துவிட்டு உதவி கொடுக்கலாம் என்று தள்ளி

வைத்திருப்பதாக தெரிகிறது. அதைப் போலவே இதையும் 1967 தேர்தலுக்குப் பின்னால் பார்த்துக்கொள்ளலாம் என்ற நினைப்பில் —அரசியல் காரணமாக—தள்ளி வைக்கப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : நான் சொன்ன தகவல், ஜப்பானிய உதவி கிடைக்கும் என்ற நம்பிக்கை இருப்பதாக சொன்னேன். யாரும் இதற்கு உதவி அளிக்க மாட்டார்கள் என்கின்ற நிலைமைக்கு இடமில்லை.

Sago Units

* 432 *Q.*—Sri V. SANKARAN : Will the Hon. the Minister for Industries be pleased to state whether the Government have proposed to evolve any method for adoption by producers of Sago Units in Salem district to remove the foul smell emanating from the effluent discharges from the settlement tanks in the said units?

The Hon. Sri R. VENKATARAMAN : The Government are considering a proposal to set up a research unit for conducting pilot plant studies to evolve suitable methods for treating the effluent discharges.

திரு. வை. சங்கரன் : இது எப்போது முடிந்து, இதற்குள்ள முடிவு எடுக்கப்படும்?

The Hon. Sri R. VENKATARAMAN : This is proposed to be taken as a Part II Scheme in 1967–68 budget.

திரு. வை. சங்கரன் : இந்த முறையைப் பின்பற்ற வேண்டும் என்று உற்பத்தியாளர்களுக்கு எடுத்துக் கூறப்படுமா அல்லது அவர்கள் வற்புறுத்தப்படுவார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : முதலில் பைலட் பிராஜக்டாக செய்யப்படுகிறது. அதற்குப்பிறகுதான் இதெல்லாம் முடிவு செய்யப்படும்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : ஸார், அக்கம்பக்கத்தில் இருக்கின்ற குடிதண்ணீர் கிணறுகள் எல்லாம் இதனால் பாதிக்கப்படுகின்றன. இப்போது பைலட் ஸ்கீமாக வைத்திருந்தாலும், இதை துரிதமாக சேலம் மாவட்டத்தில் அமல் செய்து நீரை சுத்தம் செய்வதற்கு ஏதாவது திட்டம் உண்டா ? அப்படியென்றால் அதன் விவரம் என்ன ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இந்த முறையில் சுத்தம் செய்வதைப்பற்றி ஆலோசனைகள் இருந்து கொண்டிருக்கின்றன. இதில் ஒரு முறை ஆக்சிடேஷன் பான்ட், என்று இருக்கிறது, இன்னொன்று 'பைலாஜிக்கல் ஃபில்டரேஷன் மெதட்' என்றிருக்கிறது. இதில் இப்போது பைலட் ஸ்கிம் ஒன்றை ஏற்படுத்திப் பார்த்து, அதில் உபயோககரமாக இருக்கிறதா என்பதைப் பார்த்துவிட்டு பின்னால் இருப்பதைப்பற்றி முடிவு எடுக்கப்படும்.